Crl.Misc.39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.220/2025

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW-3<br>Defence<br>Court |

| | | |
|---|---|---|
| Name | : | பிரின்ஸ் |
| Father's Name | : | கிறிஸ்த்துராஜ் |
| Village | : | ஈ.வெ.ரா சாலை |
| Taluk | : | கரூர் |
| District | : | கரூர் |
| Age | : | 35 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 12.05.2026

எதிரி ஆஜரில்லை. எதிரிக்காக கு.விமு.ச பிரிவு 317 படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் கரூர் மாவட்ட ஈ.வெ.ரா சாலையிட்ல குடியிருந்து எலெக்டீரிசியனாக வேலை செய்து வருகிறேன்.. கடந்த 08.05.2021ம் தேதி இரவு சுமார் 8.00 மணியளவில் நான் எனது நண்பர்கள் மற்றும் தம்பிகளுடன்

**ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்**

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

எனது வீட்டிற்கு அருகில் எனது மொபைல் போனில் You tube பார்த்து கொண்டிருந்தேன். அதில் சாட்டை என்ற சேனலில் இருந்து முன்னால் அமைச்சர் செந்தில்பாலாஜி மின்சார துறை, ஆயத்தீர்வு மற்றும் மதுவிலக்கு அமலாக்க துறை அவர்களை பதவி ஏற்கும் முன்பே காவேரி ஆற்றில் மணல் அள்ளுவதாக JCB மற்றும் லாரியில் மணல் அள்ளுவதாக சித்தரித்து முன்னாள் அமைச்சர் செந்தில்பாலாஜி அவர்களுக்கு அவப்பெயர் உண்டாக்கும் பொருட்டு சாட்டை துரைமுருகன் அவரது சேனலில் 8 நிமிட வீடியோ பதிவேற்றம் செய்துவிட்டார். மேற்படி சம்பவம் குறித்து எனக்கு தெரிந்த வழக்கறிஞர் பாண்டியன் என்பவரிடம் கூறியபோது அவர் இது சம்மந்தமாக புகார் அளிப்பதற்காக சைபர் கிரைம் காவல் நிலையத்திற்கு செல்வதாக கூறினார். நானும் எனது நண்பர்கள் மற்றும் தம்பிகளுடன் சைபர் கிரைம் காவல் நிலையம் சென்றோம். அங்கு வழக்கறிஞர் கொடியரசு மேற்படி சம்பவம் குறித்து புகார் கொடுத்து இருந்தார். எதிரி துரைமுருகனை பார்த்தால் அடையாளம் தெரியும். அவர் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில்லை. 09.05.2021ம் தேதி காலை சைபர் கிரைம் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் தி.மு.க கட்சியின் உறுப்பினர் ஆவேன். அதே கட்சியில் சதீஸ் என்பவரும் உள்ளார். சதீஸ் எனக்கும் சிறுவயதிலிருந்து பழக்கம் உள்ளது. மேற்படி வீடியோ பார்த்தது சம்மந்தமாக நான் நேரடியாக புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். நான் எனது மொபைலில் டவுன்லோட் செய்து பார்க்க வீடியோவை காவல் நிலையத்திற்கு சமர்ப்பித்தேனா என்றால் இல்லை. நான் வீடியோவில் பார்த்த விபரங்களை செந்தில் பாலாஜி அவர்கள் பேசிய தேதி எனக்கு ஞாபகம் உள்ளதா என்றால் இல்லை. நான் பார்த்த வீடியோவை பார்த்த

ஒம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

சாட்டை துரைமுருகன் அவர்கள் எப்பொழுது பதிவு செய்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 08.05.2021 நான் போலீசாரிடம் என்ன கூறினேனோ அதைத்தான் எனது முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேன் நான் பார்த்த சேனல் யாருடைய பெயரில் உள்ளது என தெரியுமா என்றால் சாட்டை என்று தான் இருந்தது அதன் உரிமையாளர் குறித்து எனக்கு விவரம் தெரியாது. இந்த வழக்கு குறித்து எனக்கு நேரடியாக விவரம் தெரியாது என்பதால் தான் முன்னுக்கு பின் முரணாக சாத்தியம் அடைகிறேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புகார்தாரர் திமுக கட்சியை சார்ந்தவர் என்பதால் நானும் திமுக கட்சி சேர்ந்தவன் என்பதால் புகார்தாரருக்கு ஆதரவாக சாட்சியளிக்கிறேன் என்றால் சரியல்ல

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஓம்/–எம்.சார்லஸ் ஆல்பர்ட்**

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

Crl.Misc.39

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II COURT, KARUR

CC No.220/2025

| | |
|---|---|
| Deposition of Witness for | Prosecution PW-4<br>Defence<br>Court |

| | | |
|---|---|---|
| Name | : | |
| Father's Name | : | |
| Village | : | பழைய பேருந்து நிலையம் |
| Taluk | : | கரூர் |
| District | : | கரூர் |
| Age | : | 29 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of (44 of 1969) of the day of 12.05.2026

எதிரி ஆஜரில்லை. எதிரிக்காக கு.விமு.ச பிரிவு 317 படி மனுதாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் கரூர் பழைய பேருந்து நிலையம் அருகில் குடியிருந்து பர்னிச்சர் கடையில் சேல்ஸ் மேனேஜராக வேலை செய்து வருகிறேன். கடந்த 08.05.2021 தேதி அன்று நானும் மற்றும் எனது நண்பர்களும் youtube பார்த்துக்

**ஒம்/-எம்.சார்லஸ் ஆல்பர்ட்**

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**

கொண்டிருக்கும் பொழுது சாட்டை துரைமுருகன் அவர்களின் வீடியோ பதிவு பார்த்தோம். அந்த வீடியோ பதிவில் செந்தில் பாலாஜி அவர்களுக்கு எதிராக ஏதோ மணல் அள்ளுவது போன்றும் 8 நிமிட வீடியோ பதிவு செய்திருந்தார். மேற்படி வீடியோவை பார்த்துவிட்டு பிரின்ஸிடம் நான் கூறினேன். பிரின்ஸ் அவருக்கு தெரிந்த வழக்கறிஞர் குடியரசு வைத்து சைபர் கிரைம் காவல் நிலையத்தில் மேற்படி சம்பவம் குறித்து புகார் கொடுத்தார். நாங்கள் உடன் இருந்தோம். மறுநாள் காலையில் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் திமுக கட்சியில் உறுப்பினராக உள்ளேன் என்றால் இல்லை. பிரின்ஸ் திமுக கட்சியை சேர்ந்தவர் என்றால் சரிதான். பிரிண்ஸும் நானும் சிறு வயது முதல் பழக்கம் என்றால் சரிதான் அந்த வீடியோ பதிவை பார்த்துவிட்டு நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. போலீசார் விசாரணையில் நான் பார்த்த வீடியோ பதிவுகளை பதிவிறக்கம் செய்து கொடுத்தேனா என்றால் இல்லை. சைபர் கிரைம் காவல் நிலையம் எங்கு உள்ளது என்றால் தாந்தோணிமலையில் உள்ளது திமுக கொடியரசு மற்றும் பாண்டி ஆகியோர்களை தெரியுமா என்றால் தெரியாது. சாட்டை துரைமுருகன் பதிவு செய்த வீடியோவால் எனக்கு எதுவும் பிரச்சனை உள்ளதா என்றால் இல்லை. கடந்த 18.03.2021 ஆம் தேதி அன்று செந்தில் பாலாஜி தான் 11.00 மணிக்கு பதவி ஏற்ற உடன் 11.15 மணிக்கு ஆற்றில் மாட்டுவண்டி இறக்குங்கள் யார் வந்தாலும் பார்த்துக் கொள்கிறேன் என்று சொன்ன வார்த்தையை நான் நேரில் கேட்டனா என்றால் இல்லை. நான் இவ்வழக்கிற்காக பொய் சாட்சி அளிக்கின் என்றால் சரியல்ல இவனுக்கு விபரம் எனக்கு தெரியாது என்பதால்

ஒம்/—எம்.சார்லஸ் ஆல்பர்ட்

நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.

தான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியும் அளிக்கிறேன் என்றால் சரியல்ல அ.சா.3 பிரின்ஸ் எனது நண்பர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கு பொய்யாக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்/—எம்.சார்லஸ் ஆல்பர்ட்**

**நீதித்துறை நடுவர் எண்.2, கரூர்.**